**12.9.2023**
**OS 205/2022**
**வா.சா.2 செல்வம்**
**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் பி.ஏ வரை படித்துள்ளேன். நான் பைனான்ஸ் தொழில் பார்த்து வருகிறேன் என்றால் இல்லை. நான் பைனான்ஸ் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். பிரதிவாதியை எனக்கு 10 வருடமாக தெரியும். பிரதிவாதியை இடம் வாங்க, விற்க வந்த இடைத்தரகர்கள் மூலமாகத் தெரியும். பிரதிவாதியின் பெயர் பிரபாகரன். பின்னிட்டு சாட்சி நான் பிரபாகரனுக்காக சாட்சி சொல்ல வந்துள்ளதாக சொல்கிறார். வசுமதி எனக்கு எவ்வளவு நாளாக தெரியும் என்றால் அவர் எனக்கு பழக்கமில்லை, அவரது கணவர்தான் எனக்கு பழக்கம். அவரது கணவரை எனக்கு 5 வருடமாகத் தெரியும். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியாது, பிளாட் எண் தெரியும். சொத்து விற்பனைக்கு உள்ளதாக யார் சொல்லி தெரியும் என்றால் மருதசுரேஷ் சொல்லி தெரியும். சொத்தை உடனடியாக விற்பனை செய்ய வேண்டும் என்று சொன்னதாக சொல்லியுள்ளேன், அவ்வாறிருக்க ஏன் ஒரு வருட கால அவகாசம் போடப்பட்டது என்றால் கிரையம் வாங்குபவர்(பிரபாகரன்) தொகை குறைவாக உள்ளதால் காலஅவகாசம் கேட்டார். அதனால் ஒப்பந்த பத்திரமாக போடப்பட்டது. 08.03.2019 (வா.சா.ஆ.2) கிரைய ஒப்பந்த பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை. கிரைய ஒப்பந்தம் போட்ட விவரம் எனக்கு மறுநாள் முதலில் பிரபாகரன் சொல்லி தெரியும், பின்னிட்டு மருதசுரேசும் சொன்னார். பிரபாகரன் யாரிடம் பணத்தை கொடுத்தார் என்றால் மருதசுரேசிடம் கொடுத்தார். 2019 மார்ச் முதல் வாரத்தில் பிரபாகரன் அலுவலகத்தில் வைத்து பணம் கொடுக்கப்பட்டது. பிரபாகரன் வீடு கட்டும் நிறுவனம் வைத்து நடத்தி வருகிறார். அன்றைய தினம் ரூ.4லட்சத்தில் பாதி பணமாகவும், மீதி பணம் காசோலையாகவும் பிரபாகரன் கொடுத்தார். அவ்வாறு பணம் கொடுக்கும்போது பிரபாகரன் தரப்பில் நானும், பிரபாகரன் பங்குதாரர்(பாய்) இருந்தோம், பிரதிவாதி தரப்பில் அவரது மாமனார், மருதசுரேஷ், பிரதிவாதி மற்றும் ஒரு நபர் இருந்தார். வழக்கு சொத்தை கிரையம் போடுவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்தாரா என்று எனக்குத் தெரியாது. நான் இடைத்தரகர். பணம் கொடுத்த தேதியில் பிரதிவாதியிடமோ, மருதசுரேசிடமோ ஏதாவது ஆவணங்கள் எழுதி வாங்கப்பட்டது என்றால் ரூ.100 பத்திரத்தில் எழுதி வாங்கப்பட்டது. அந்த ரூ.100 பத்திரத்தில் என்ன எழுதப்பட்டது என்று எனக்குத் தெரியாது. அதை நான் படிக்கவில்லை. அந்த

பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை. கிரைய ஒப்பந்தம் போட்ட அன்று நான் பத்திர பதிவு அலுவலகத்திற்கு நான் செல்லவில்லை. 2வது ஒரு கிரைய ஒப்பந்த பத்திரம் போட்ட விவரத்தை பிரபாகரன் என்னிடம் தெரிவித்தார். 2வது பணம் ரூ.2லட்சம் கொடுக்கப்பட்டதாக சொல்லும் விவரம் என் முன்னிலையில் கொடுக்கப்படவில்லை. எந்த தேதியில் பணம் கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை பிரபாகரன் என்னிடம் சொல்லவில்லை. ஒரு வருடம் கழித்து என்று சொன்னார். வழக்கு சொத்து உள்ள இடம் எது என்றால் மதுரை கே.புதூர் மகாலட்சுமி நகர். நான் அங்குதான் வசித்து வருகிறேன். வழக்கு சொத்தின் 1செண்டின் சந்தை மதிப்பு எவ்வளவு போகும் என்று எனக்குத் தெரியாது. கிரைய ஒப்பந்தம் செண்டிற்கோ, சதுரடிக்கோ பேசப்படவில்லை, மொத்தமாக பேசப்பட்டது. எதனடிப்படையில் கிரையத் தொகை பேசப்பட்டது என்றால் பிரதிவாதிக்கு அவசர தேவை என்பதால் அந்த தொகை குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டது. ரூ.6லட்சம் கிரைய முன்பணம் கொடுக்கப்பட்டதோ, கிரையத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டதோ எனக்கு நேரடியாகத் தெரியாது. வழக்கு போட்ட விவரத்தை வாதி என்னிடம் 6 மாதங்களுக்கு முன்பாக தெரிவித்தார். வழக்கு போடுவதற்கு நான்தான் தெரிவித்தேன். கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்ற சொல்லி யாரிடம் கேட்டேன் என்றால் மருதசுரேஸ் மற்றும் அவரது தகப்பனாரிடம் கேட்டோம். நான் மட்டும்தான் பிரபாகரன் வீட்டிற்கு சென்றேன். 2021 ஏப்ரல்க்கு முன்பாக சென்று கேட்டேன். தேதி ஞாபகம் இல்லை. மாலை 4 மணிக்கு சென்று கேட்டேன். அன்றை தேதியில் மருதசுரேஷ் 10 நாட்களில் கிரையம் பதிந்து தருவதாக என்னிடமும், பிரபாகரனிடமும் கூறினார். மேற்படி மருதசுரேசிடம் உங்களை நம்ப முடியாது என்று கூறி தாவா சொத்தின் அசல் ஆவணங்களை நான் வாங்கி பிரபாகரனிடம் கொடுத்தேன். சட்ட அறிவிப்பு அனுப்பிய விவரம் எனக்குத் தெரியாது. கிரைய ஒப்பந்தம் தவிர பிரபாகரனுக்கும், மருதசுரேசுக்கம் கொடுக்கல், வாங்கல் இருந்த விவரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. மருதசுரேஷ் என்னிடம் பிரபாகரனுக்கு நான் வட்டி கட்டி வருவதாக என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. எனக்கு வழக்கு விவரங்கள் எதுவும் தெரியாது என்றும், பிரபாகரன் எழுதி வைத்த பிரமாண பத்திரத்தில் கையெழுத்து செய்துவிட்டு அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மருதசுரேஷ் வீட்டிற்கு செல்லும்போது அவரது வீட்டில் அனைவரும் நன்றாகத்தான் இருந்தனர், உடல்நல குறைவு எதுவும் இல்லை. பிரபாகரன் வட்டிக்கு

பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறார் என்றும், அந்த விவரம் தெரிந்தே நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.